திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் முட்டத்தில் உள்ள எம்.ஆர்.எல். மற்றும் சில பெரிய தொழில்கள் நடக்கின்ற அந்த இடத்தில் கிடைக்கின்ற மூலப்பொருளான கச்சாப் பொருளை எடுத்துக்கொண்டு, கடலூருக்குச் சென்று அங்கே அதை செயல்படுத்தலாம் என்று சொன்னார்கள். நாகை மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு, கோத்தாரி, எம்.ஆர்.எல். போன்ற பேக்டரிகள் இயங்கும்போது நாகை நகரம் அழகாகத் திகழும். அப்படிப்பட்ட அழகு பொருந்திய நாகப்பட்டிணத்தில் கிடைக்கின்ற கச்சாப் பொருள்களைக் கொண்ட உப தொழில்களுக்குத் தேவையான துறைமுகம் அங்கேயே இருக்கிறது. ஆகவே, கடலூர் திட்டத்தை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் மாற்றி, நாகைக்கே அதைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலைகள் கடலூரில் தொடங்கப்படும் என்று அரசு அனுமதி அளித்து அதற்கு உண்டான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அதை மீண்டும் நாகைக்கு மாற்றினால் கடலூர்க்காரர்கள் கலவரத்திற்கு வந்துவிடுவார்கள். ஆகவே, அந்த யோசனை இப்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 374, திரு. செ.து. வரதராஜன்; *மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

374–

நோயுற்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்குப் பண உதவி வழங்குதல்.

***15244*-**திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயுற்ற ஆசிரியர்களுக்கு, ஆசிரியர் சேமநல நிதியிலிருந்து மருத்துவச் சிகிச்சைக்காக பண உதவி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பு இல்லை.

திரு. செ.து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு மாதம் 15 ரூபாய் மெடிக்கல் அலவன்ஸ் தரப்படுகிறது. இந்தத் தொகை மிகவும் குறைவானது, மருந்து வாங்குவதற்குக் கூட இப்போதைக்கு இருக்கிற விலைவாசியில் முடியாத நிலையில் இருக்கிறது. இந்தத் தொகை போதாத நிலையில் இருக்கிறது. பெரிய, கொடிய, நோய் உள்ளவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கும், அதற்காக பணம் அதிகம் தேவைப்படுகிறது. பண வசதியில்லாத காரணத்தால் உயிர் இழக்கின்ற அவல நிலை கூட ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு சேம நல நிதியிலிருந்து பெருந்தொகையை ஒதுக்கித்தர அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. எனினும், ஆசிரியர்களுக்கு அவர்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக 75% முன் பணம் பெற அனுமதி இருக்கிறது. ஆசிரியர் நல தேசிய நிதியில் (National Foundation for Teachers Welfare) சில குறிப்பிட்ட வியாதியால் பீடிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கென நிதி உதவி ரூ. 750 முதல் ரூ. 25,000 வரை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிய நோய்களாலும், தீராத நோய்களாலும், பெரிய அறுவை சிகிச்சைகளினாலும் பாதிக்கப்பட்டு இருக்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளத்தோடு லீவு தந்து, அந்த நோய் குணம் ஆகின்றவரை அவர்களுக்கு உதவி செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நோயால் பீடிக்கப்பட்டு இருப்பவர்கள் ஊதியத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் ஆசிரியர்களுக்கு மகப்பேறு காலத்தில் குழந்தை பெறுவதற்காக அட்வான்ஸ் தொகை வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு விடுமுறை அளிக்கிற திட்டம் அரசிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 375, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

375-

திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

**21745-திரு. ஜெ. பாலகங்காதரன்* :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தங்கல் அரசு எஸ்.ஆர்.என். மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக வகுப்பறைகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இருந்தபோதிலும், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான்-இன்றையதினம் வரலாற்றிலே கல்விக்கு என்று ஒரு தனி இடத்தைப் பெற்று இருக்கின்ற இந்த நல்லாட்சியிலே, காமராசர் மாவட்டத்திலேயே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி, தனியார் மேல்நிலைப் பள்ளி அனைத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கிக்கொண்டு சவால் விடுகின்ற அளவுக்கு அங்கே திறமையாகச் செயல்பட்டு வருகின்ற அந்த மேல்நிலைப் பள்ளி கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டிடங்களை வைத்துக்கொண்டு சமாளித்து வருகின்றது. அந்தக் கட்டிடங்கள் போதாத ஒரு நிலையில்தான் இன்றையதினம் இந்தக்